செ.வெ.எண்: 539

நாள்: 01/07/10

## செய்திக்குறிப்பு

அரசு கவின் கலைக் கல்லூரியில் இளங்கவின்கலை பட்டப்படிப்பு முதலாமாண்டு, இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு மற்றும் முதுகலை பட்டப்படிப்பு முதலாமாண்டு பயிலும் மாணவர்களுக்கு, கோடை விடுமுறை அனுமதிக்கப்பட்டுள்ளதால், கோடை விடுமுறைக்குப் பின்னர் கல்லூரி 05.07.2010 அன்று திறக்கப்படவுள்ளது. கல்லூரி திறக்கப்படும்பொழுது உறுதிமொழி கடிதத்தை முழுமையாக படித்துணர்ந்து பெற்றோரின் கையொப்பத்துடன் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கல்லூரிக்கு வருகை தரும்பொழுது தங்களது அடையாள அட்டையை தவறாமல் எடுத்து வருதல் வேண்டும். கல்லூரி திறக்கப்படும் நாளில் அடையாள அட்டையை கொண்டு வரப்பெறாத மாணவ, மாணவியர் வழங்கப்பட்டுள்ள உறுதிமொழி கடிதத்தில் பெற்றோரின் கையொப்பம் மற்றும் மாணவர்களின் கையொப்பம் இடப்பெறாத மாணவர்கள், கல்லூரிக்கு வர அனுமதிக்கப்படமாட்டார்கள். மேற்காண் விவரங்கள், அனைத்து மாணவர்களுக்கும் தபால் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணையர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

28/6/10